# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C No. 412 / 2017 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 1 |
| Name | : பிரேம்குமார். |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.10.2023.

1 2 4 எதிரிகள் ஆஜர். 3 ஆம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை:</u>

நான் தற்போது, விருதுநகர் மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறையில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். 30.08.2015 ஆம் தேதி காவல் துறை துணை கண்காணிப்பாளர் உசிலம்பட்டி ஸ்பெசல் பிரிவில் பணிபுரிந்து வந்தபோது, ஒரு கஞ்சா வழக்கு சம்பந்தமாக கணவாய் பட்டி கிராமத்திற்கு நானும், பாஸ்கரன் தலைமைக் காவலரும் கணவாய்ப் பட்டிக்கு போகும்போது, ஈஸ்வரன் கோவிலுக்கு அருகே ஒரு குருப்

அசிங்கமாகப் பேசி சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது பாஸ்கரன் வாகனத்தை ஓட்ட நான் உட்கார்ந்துகொண்டு சென்றேன். அப்போது பாஸ்கரன் என்ன பிரச்சனை என்று பாருங்கள் என்று சொன்னார். நான் போய்க் கேட்டேன். நான் போலிஸ்தான். என்ன பிரச்சனை என்று கேட்டேன். நீ யாருடா என்று கேட்டார்கள். என்னைத் தகாத வார்த்தைகளால் திட்டி கம்பைக் கொண்டு என்னை பாண்டியராஜனும், செல்வமும் என்னை அடித்தார்கள். பாக்கியராஜ், வீருக்காளையும் கையால் என்னை அடித்தார்கள். இதனால் என்னை கம்பால் அடித்ததால் இடது கன்னத்தில் காயம் ஏற்பட்டது. முதுகிலும் காயம் ஏற்பட்டது. வீருக்காளையும், பாக்கியராஜும் என்னை முதுகிலும் கையிலும் அடித்தார்கள். சம்பம் நடந்த போது 3.30 மணியிருக்கும். பின்னர் காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அது அ.சா.ஆ.1. என்னிடம் காட்டப்டும் கட்டைதான் என்னைத் தாக்கப் பயன்படுத்தியது. அது சா.பொ.1.

குறுக்கு விசாரணை: இல்லை.

Sd / Thiru. P.S. ரஸ்கின் ராஜ், 13.10.23.

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.